தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 6-12-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## சூரியகாந்தியின் விலை அறுவடையின் போது நிலையாக இருக்கும்

உலகளவில், சூரியகாந்தி எண்ணெய், உணவு பயன்பாட்டில் தாவர எண்ணெய்களில் நான்காமிடம் வகிக்கிறது. உலகளவில், சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தியில், உக்ரைன் முக்கிய உற்பத்தியாளராகவும், இந்தியா முக்கிய இறக்குமதியாளராக உள்ளன. ரஷ்யா, ஐக்கிய ஐரோப்பிய நாடுகள், அர்ஜென்டீனா மற்றும் சீனா ஆகியவை பிற முக்கிய உற்பத்தி நாடுகளாகும். கரைப்பான் பிழிந்தெடுக்கும் சங்கத்தின்(SEA) படி, இந்தியாவில் ஆண்டு மொத்த தாவர எண்ணெய் தேவையான 60 சதவீதம், 17-18 மில்லியன் டன்கள் இறக்குமதியின் மூலம் நிறைவு செய்யப்பட்டது. உணவு எண்ணெய் மதிப்பீட்டின் படி, (நவம்பர் 2013 – அக்டோபர் 2014) ல், சூரியகாந்தி எண்ணெய் இறக்குமதி 1.3 மில்லியன் டன்களாகும். இவை 2014-15ல், 1.4 மில்லியன் டன்கள் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில், வேளாண் அமைச்சகத்தின் கணக்கீட்டின்படி, சூரியகாந்தி பயிரிடும் பரப்பு 2013-14ல் 2.50 இலட்சம் எக்டராகும். இது கடந்த ஐந்து ஆண்டு கால சராசரி பயிரிடும் பரப்பு 7.43 இலட்சம் எக்டரைக்காட்டிலும் குறைவாகும். மத்திய அரசின் முதன்மை முன்மதிப்பீட்டின் படி, (2014-15) இந்தியாவில் சூரியகாந்தி விதை உற்பத்தி கரீப் பருவத்தில் 1.29 இலட்சம் டன்களாகும். இது நடப்பாண்டு (2013-14) கரீப் பருவத்தில் உற்பத்தியான 1.53 இலட்சம் டன்களை விட குறைவாகும். இந்தியாவில், சுகாதார நல உணர்வு மற்றும் அதிக வருமானம் காரணமாக, சூரியகாந்தி எண்ணெயின் தேவை அதிகரித்து வருகிறது. தென்னிந்தியாவில், சூரியகாந்தி எண்ணெயின் நுகர்வு 70 சதவீதமாகவும் உற்பத்தி 5 சதவீதமாகவும் உள்ளது. சூரியகாந்தி எண்ணெய் பிண்ணாக்கு முக்கிய கோழித் தீவனமாக பயன்படுத்தப்படுகிறது.

கர்நாடகா, மகாராஷ்டிரா, தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் தெலுங்கானா ஆகியன சூரியகாந்தி பயிரிடும் முக்கிய மாநிலங்களாகும். கரூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், தூத்துக்குடி, தர்மபுரி,

நாமக்கல் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்கள் தமிழ்நாட்டில், மொத்த சூரியகாந்தி பயிரிடும் பரப்பில் 79 சதவீதமும், உற்பத்தியில் 80 சதவீதமும் பங்களிக்கின்றன. தமிழ்நாட்டில், சூரியகாந்தி விதையின் உற்பத்தி திறன் 1.81 டன்களாகும். இது நாட்டின் சராசரி உற்பத்தி திறனான 2.64 டன்கள் / எக்டரை விட அதிகமாகும்.

தமிழ்நாட்டில், சூரியகாந்தி கார்த்திகை (அக்டோபர் - நவம்பர்) மற்றும் சித்திரை (ஏப்ரல் - மே) பட்டத்தில் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில், முக்கிய கலப்பினமான சன்பிரட் ரகம் பயிரிடப்படுகிறது. இவற்றின் அதிக எண்ணெய் சத்து காரணமாக அதிக விலை கிடைக்கிறது. தற்போது சூரியகாந்தி விதை வெள்ளகோவில் சந்தையில் குவிண்டால் ரூ.3200 ஆக உள்ளது.

விவசாயிகள் சூரியகாந்தி விதைப்பிற்கான முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், கடந்த 13 ஆண்டுகளாக வெள்ளகோவில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய சூரியகாந்தி விதையின் விலையை ஆராய்ந்தது. சந்தை மற்றும் பொருளியல் ஆய்வுகளின் அடிப்படையில், சூரியகாந்தி விதையின் அறுவடைகாலமான பிப்ரவரி, 2015ல் குவிண்டாலுக்கு ரூ.3300 -3500 என இருக்கும். எனவே விவசாயிகள் மேற்கண்ட விலையின் அடிப்படையில் விதைப்பு முடிவுகளை எடுக்க பரிந்துரைக்கபடுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003.
தொலைபேசி -0422-2431405

<u>தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
எண்ணெய் வித்துக்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641 003.
தொலைபேசி எண் - 0422-2450812

மக்கள் தொடர்பு அலுவலர்